**சுற்றறிக்கை எண்.10/2004**

வருவாய் நிருவாகம்,
பேரிடர் மேலாண்மை மற்றும்
பேரிடர் தணிக்கும் துறை,
எழிலகம், சென்னை–5

**ந.க./71404/2001** **நாள் –5. 5.2004**

**சுற்றறிக்கை**

பொருள் – பொதுப்பணிகள் – தமிழ்நாடு குடிமைப்பணி – அலுவலக உதவியாளர்கள் முறையற்ற நியமனம் – நியமனத்திற்குக் காரணமான அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல் – மாவட்ட நிர்வாகத்தில் தேவையற்ற கால விரயம் ஏற்படுத்தியது அறிவுரைகள் வழங்குதல்.

------

தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்த ஒரு இரவுக்காவலருக்கு அலுவலக உதவியாளராக பணி நியமனம் ஒரு சார் ஆட்சியரால் 16.10.93 நாளிட்ட அவரது செயல்முறை ஆணையில் வழங்கப்பட்டு அந் நபர் 20.10.93 அன்று பணியில் சேர்ந்துள்ளார்.

2. அரசாணை எண் 666 நிதி (விபேக்) நாள் 24.8.92–ல் அலுவலக உதவியாளர் நியமனம் தடை செய்யப்பட்ட நிலையில் 1993–ம் ஆண்டு அந்நபருக்கு அலுவலக உதவியாளராக நியமணம் வழங்கியது தவறு என்றும் அவரை மீண்டும் பணியிறக்கம் செய்து முறையற்ற வகையில் பதவி உயர்வு அளித்த அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு அரசு ஆணையிட்டது,

3. முறையற்ற வகையில் நியமனம் செய்த அலுவலர்களது விவரங்களை சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் அனுப்புமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவரைக் கோரப்பட்டதில் முறையற்ற நியமணத்திற்குக் காரணமான இரு அலுவலர்கள் விவரம் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவரால் தரப்பட்டது இந்நேர்வில் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பதிவறையில் உடனடியாகக் கிடைக்கப் பெறவில்லை எனவும் மாவட்ட ஆட்சித்தலைவரால் தெரிவிக்கப்பட்டது மாவட்ட ஆட்சித்தலைவரது அறிக்கை அடிப்படையில் சார் நிலை அலுவலர் மீது தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதிகளில் விதி

17(எ)–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் ஏற்படுத்தப்பட்டன. குறிப்பாணை மீது விளக்கத்தை அளித்த குற்ற அலுவலர் முறையற்ற நியமனம் செய்யப்பட்ட கால கட்டத்தில் தாம் பணியாற்ற வில்லை என தெரிவித்ததன் அடிப்படையில் சம்பவ கால கட்டத்தில் பணியாற்றிய சரியான அலுவலர்களது விவரங்களை ஆவணங்களுடன் தெரிவிக்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவரை மீண்டும் கோரப்பட்டது.

4. இது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் தமது அறிக்கையில் முறையற்ற நியமனத்திற்குக் காரணமான அலுவலர்கள் என தெரிவிக்கப்பட்ட இருவரும் அக்கால கட்டத்தில் பணியாற்றவில்லை என்றும் முறையற்ற நியமணத்திற்கு வேறு இரு அலுவலர்கள் காரணமானவர்கள் என தெரிவித்ததன் அடிப்படையில் சார்நிலை அலுவலர் மீது மேல் நடவடிக்கை கைவிடப்பட்டது.

5. இந்நிலையில் மேற்காண் முறையற்ற நியமனம் தொடர்பாக சம்பந்தப்பட்ட கோப்புக்களை உடனடியாகத் தேடி எடுத்து அறிக்கை அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவரைக் கோரப்பட்டது. ஆனால் ஆவணங்கள் கோரப்பட்டு இரு ஆண்டுகள் கழித்தும் தெளிவான அறிக்கையோ அல்லது ஆவணங்களோ மாவட்ட ஆட்சியரிடமிருந்து வரப்பெறவில்லை இறுதியாக வரப்பெற்ற மாவட்ட ஆட்சியரது அறிக்கையும் தெளிவற்ற நிலையில் வரப்பெற்றது. இத்தகைய போக்கால தேவையற்ற காலவிரயம் இந்நேர்வில் ஏற்பட்டதுடன் தவறு செய்த நபர்களைக் தப்பிக்கும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. நீண்ட கால நிலுவைக் கோப்புக்களை மாவட்ட வருவாய் அலுவலர்/ மாவட்ட ஆட்சியரது நேர்முக உதவியாளர் அளவில் நெருக்கிப் பிடித்த பின்பே கோப்பு பெறப்பட்டு உண்மையான நிலை அறியப்பட்டது. இத்தகைய செயல் குற்றம் புரிந்தவர்களை காப்பாற்ற முயற்சிக்கும் நேர்மையற்ற தன்மையைக் காண்பிக்கின்றது.

6. எனவே இது போன்ற கூர் உணர்வு நேர்வுகளை ஆவணங்கள் அடிப்படையில் சரிவர ஆய்வு செய்து முறையற்ற நியமனம் ஏதும் உறுதி செய்ய படின் ச,மபந்தப்பட்ட அலுவலர்கள் மீது தக்க நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். இவ்வாறான நடவடிக்கை

மேற்கொள்ளும்பொழுது எதிர்காலத்தில் இது போன்ற நியமனங்கள் நடைபெறாமல் தடுக்கப்படுவதுடன் குற்றம் புரிபவர்களுக்கும் இது ஒரு பாடமாக அமையும் எனவே இது போன்ற நேர்வுகளில் தேவையற்ற கால விரயத்தைத் தவிர்த்து முறையற்ற நியமனம் செய்த சம்பந்தப்பட்ட நபர்களைச் சரியாகக் கண்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவதை உறுதி செய்து கொள்ளுமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவகளும் கோரப்படுகிறார்கள்.

இச்சுற்றறிக்கையினைப் பெற்றுக் கொண்டதற்கு ஒப்புகை அளிக்குமாறும் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கோரப்படுகின்றனர்.

ஒம்/– ஆர்.சந்தானம்,
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய்
நிருவாக ஆணையர்

பெறுநர்–

1. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
2. முக்கிய ஆணைத் தொகுப்பு
   பணி 2–1
   பணி 2–2
   அ.ந.1(1)

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய்
நிருவாக ஆணையருக்காக.